**செய்தி வெளியீடு எண் : 535** **நாள் : 14.03.2023**

# பெரம்பலூர் மாவட்டம்

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குன்னத்தில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிறுத்தத்தினையும், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாணவ மாணவிகளுக்கு பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள "முத்தமிழ் அறிஞர் கலைஞர் போட்டித்தேர்வு நூலகத்தினையும்" திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதிஸ்டாலின் அவர்கள் பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குன்னத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் விற்பனை பொருட்களுக்கான அரங்குகளுடன் கூடிய புதிய பேருந்து நிறுத்தத்தினையும், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாணவ மாணவிகள் போட்டித்தேர்வுகளுக்கு தயார்படுத்திக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தினையும் இன்று (14.03.2023) தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தொல்.திருமாவளவன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.பிரபாகரன் அவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திரு.சி.ராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குன்னம் ஊராட்சியில், குன்னம் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சருமான திரு.சா.சி.சிவசங்கர், அவர்களின் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதி 2021–22 கீழ் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் குன்னம் பகுதியில் புதிய பேருந்து நிறுத்தம் கட்ட 15.07.2022 அன்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவவங்கர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கட்டுமான பணிள் முழுவதுமாக நிறைவுபெற்று இன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

மேலும், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் சொந்த நிதியில் இருந்து, மாணவ மாணவிகளுக்கு போட்டித்தேர்வுகளுக்கு பயன்படும் வகையில் குளிரூட்டி வசதிகயுடன் கட்டப்பட்டுள்ள "முத்தமிழ் அறிஞர் கலைஞர் போட்டித்தேர்வு நூலககம் மற்றும்

படிப்பகத்தினை" மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் திறந்துவைத்து அங்கிருந்த மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

பின்னர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பெரம்பலூர் மாவட்டத்திற்கு விரைவில் அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பது தொடர்பாக மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்துள்ளார் விரைவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரை பெற்று பெரம்பலூர் மாவட்டத்திற்கு புதிய மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள ஸ்கேட்டிங் மைதானத்தில் சிந்தடிக் தளங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு எப்போதும் மாணவ மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறையோடு செயல்படும் அரசாக திகழ்கிறது. இன்று குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் மாணவ மாணவிகள் போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்குப் பயன்படும் வகையிலான நூலகங்களுடன் கூடிய நூலகம் மற்றும் படிப்பகத்தினை திறந்து வைத்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு தெரிவித்தார்

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ஷியாமளாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி அ.லலிதா, வருவாய் கோட்டாட்சியர் திருமதி ச.நிறைமதி, வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் திருமதி முத்தமிழ்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மரு.கருணாநிதி, திரு.ராஜேந்திரன், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சேகர் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in